# இந்திய தத்துவ நோக்கில் கெடுதி பற்றிய பிரச்சினை - ஓர் ஆய்வு

**க. மதிசீலன்**

ஒப்பீட்டுச்சமயமும் சமூக நல்லுறவும் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
mathi2100@gmail.com

**சுருக்கம்:** கெடுதி பற்றிய பிரச்சினையானது சமய மெய்யியலில் குறிப்பாக ஒழுக்க மெய்யியலில் பல்வேறு வகையான வாதப்பிரதிவாதங்களுக்கு இலக்காகும் ஒன்றாகவும் இது உள்ளது. மேலைத்தேய மெய்யியலில் முக்கிய பிரச்சினையாகத் தோன்றிய இக்கெடுதி குறித்த பிரச்சினை இன்று மெய்யியல் உலகில் பதிலிறுக்க முடியாத வினாக்களைத் தாங்கி விஸ்தரித்தமைக்கு கிறிஸ்தவ சமயமும் முக்கிய பங்கினை வழங்கியுள்ளது என அண்மைக்கால ஆய்வுகள் கூறுகின்றன. கீழைத்தேய மெய்யியலிலும் இப்பிரச்சினை குறிப்பிடத்தக்க தாக்கத்தினை உண்டுபண்ணியிருந்தாலும் ஒப்பீட்டு ரீதியில் மேலைத்தேயத்தைவிட ஆரவாரம் அதிகம் இடம்பெறாத ஒரு பிரச்சினையாக இது உள்ளது எனவும், ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவ்வாறு உலகில் அனேகமான சமயங்கள் இப்பிரச்சினையைத் தம்மகத்தே கொண்டுள்ளதன் காரணமாக இதற்குத் தகுந்தவிடை தேடவேண்டிய நிலை பின்வந்த சிந்தனையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் இறையயலாளர்களும், சமய மெய்யியலாளர்களும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கெடுதி குறித்து ஆராய்ந்து இவற்றின் சரியான புரிந்து கொள்ளலை முன்னிறுத்த முனைகின்றனர். இந்த முயற்சியே கெடுதியை ஒரு மெய்யியற் பிரச்சினையாக உருவாக்கிக் கொண்டது. இந்திய மெய்யியல் பாரம்பரியங்களில் இப்பிரச்சினை குறித்தாராயும் ஆய்வாளர்கள் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளனர். ஆயினும் அண்மைக் காலங்களில் இத்தகைய ஆய்வு முயற்சிகளில் ஈடுபடும் மெய்யியல் ஆய்வாளர்களின் தொகை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இந்தவகையில் இவ்வாய்வானது ஒழுக்க மெய்யியலில் அதிகமான வாதப்பிரதிவாதங்களுக்கு இலக்காகும் கெடுதி பற்றிய பிரச்சினை தொடர்பான கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்வதோடல்லாமல், இந்திய தத்துவங்களைப் பொறுத்த வரையில் கெடுதி என்பது எத்தகைய அர்த்தங்களையும் பெயர் வடிவங்களையும் பெறுகின்றது என்பதனை ஆய்வு செய்வதாக அமைகின்றது. கீழைத்தேய சமய மெய்யியலில் குறிப்பாக இந்திய ஒழுக்க மெய்யியலில் கெடுதி பற்றிய பிரச்சினையானது ஒப்பீட்டளவில் மேலைத்தேய ஒழுக்க மெய்யியலை விட ஆரவாரம் அதிகமின்றி இருப்பது ஏன்? என்பதுவும், இந்திய தத்துவங்களில் கெடுதி எனப் பொருள் கொள்ளப்படக்கூடியவை எவை? என்பதுமே இவ்வாய்வின் பிரச்சினையாகும். இந்திய சமய மெய்யியலில் கெடுதி பற்றிய பிரச்சினை பூதாகரமாக உருவெடுக்காமைக்கான காரணங்களைக் கண்டறிதலும், இந்திய தத்துவ சிந்தனைகளில் கெடுதியானது எத்தகைய வடிவங்களைப் பெறுகின்றது என்பதை ஆராய்ந்து வெளிக்கொணர்தலுமே இவ்வாய்வின் நோக்கமாக உள்ளது. இந்திய மெய்யியல் கெடுதியையும் அதற்கான காரணங்களையும் அமைதியாக ஏற்றுக் கொண்டமையும், அதனைக் கடவுளுடன் ஒப்பிட்டு, முரண்பட்டுக் கொள்ளாமையுமே கெடுதி பற்றிய பிரச்சினை இங்கு அமைதியுற்றமைக்குக் காரணமாகும் என்பது இவ்வாய்வின் மூலம் எதிர்பார்க்கப்படும் முடிவாகும்.

இவ்வாய்வாய்வில் இந்திய மெய்யியலில் கெடுதி பற்றிய பிரச்சினை ஆரவாரமின்றி இருப்பதற்கான காரணங்களைக் கண்டறிவதற்காக மேலைத்தேய மெய்யியல் முன்மாதிரிகளைப் பெறும் பொருட்டு சிறியளவிலான ஒப்பீட்டுப் பகுப்பாய்வு முறை பின்பற்றப்படுகின்றது. மற்றும், இந்திய மெய்யியற் போக்குகளைக் கண்டறியும் பொருட்டு இவ்வாய்வு வரலாற்றுப் பகுப்பாய்வு முறையினையும் கைக்கொள்கின்றது. இவ்வாய்விற்காக இந்திய தத்துவங்களை விளங்கிக்கொள்ள உதவும் மூலநூல்கள், அவை சார்ந்த உரை நூல்கள், விளக்க நூல்கள், கெடுதி பற்றிய பிரச்சினை தொடர்பாக விவாதிக்கின்ற ஆய்வு நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளத் தகவல்கள் என்பன சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றன. இவ்வாய்வானது முதலில் மேலைத்தேய ஒழுக்க மெய்யியலில் கெடுதி பற்றிய பிரச்சினையானது அதிகம் விவாதத்திற்குட்படும் ஒன்று எனச் சுட்டிக்காட்டும் பொருட்டு கிறிஸ்தவ சமய மெய்யியலில் கெடுதி பற்றிய பிரச்சினையின் அறிமுகம் வழங்கப்படுகின்றது. அடுத்து இந்திய தத்துவங்கள் என்னும் போது வைதிக, அவைதிக தத்துவங்கள் என இரண்டாக வகுத்து, வைதிக தத்துவங்களில் உபநிடதம், வேதாந்தம், சைவ சித்தாந்தம், தர்சனங்கள் என்பனவும் அவைதிக தத்துவங்கள் என்ற வகையில் சமணம், பௌத்தம், உலகாயும் என்பனவுமே கெடுதி பற்றிய பிரச்சினையின் நோக்கில் ஆய்வு செய்யப்படுகின்றன.